www.ecourtsindia.com

# குடும்பநல நீதிமன்றம் , பெரம்பலூர்.

# I.D.O.P.No.41/2021

**சாட்சி** : ம.சா.1 நாள்: 08.07.2022

**பெயர்** : அருண்குமார்

**குறுக்குவிசாரணை (எதிர்மனுதாரர் தரப்பில்) :**

நான் பி.ஏ., பி.எட். படித்திருக்கிறேன். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணம் இருவீட்டார் சம்மதத்துடன் நடந்தது என்றால் சரிதான். பொதுவாக எங்களுக்கு ஜாதகம் பார்க்கும் பழக்கம் இல்லை. ஜாதகம் பார்த்து பொருத்தம் சரியாக இருந்ததால் தான் இந்த திருமணத்திற்கு ஏற்பாடு செய்தோம் என்றால் சரிதான். திருமணம் நடந்து இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். மனுவில் எதிர்மனுதாரருக்கு எதிராக சொல்லியுள்ள குற்றச்சாட்டுக்களைப் பொறுத்து முதலில் சர்ச்சில் சொல்லி பஞ்சாயத்து பேசப்பட்டது. அதன்பிறகு, மகளிர் காவல்நிலையத்திலும் சமூக நலத்துறையிலும் நான் தான் புகார் கொடுத்துள்ளேன். வழக்கு போடுவதற்கு இரண்டு வாரம் முன்பாக சர்ச்சில் புகார் செய்தேன். மனுவில் சொன்ன குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் சர்ச்சிலும் சொல்லியிருக்கிறேன். மனுவில் சொல்லியுள்ள குற்றச்சாட்டுக்கள் எதையும் சர்ச்சில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சர்ச்சில் நடந்த விசாரணையில் எதிர்மனுதாரரை மூன்று மாதங்கள் அவரது பெற்றோர் வீட்டில் இருக்கும்படியும் நான் வந்து அழைத்துச்செல்வதாகவும் சொன்னேன் என்றால், நான் அவ்வாறு சொல்லவில்லை. அவ்வாறு நான் சொன்னதால் அதற்கு உடன்படாமல் எதிர்மனுதாரர் சர்ச்சில் எழுதிக்கொடுத்து போய்விட்டார் என்றால் சரியல்ல. திருமணம் நடந்தது முதல் தற்போதுவரை எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே தாம்பத்ய உறவு ஏற்படவில்லை என்று பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால்../

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNPB070001082021/truecopy/order-2.pdf

சரியல்ல. எதிர்மனுதாரர் தாம்பத்ய உறவிற்கு மறுக்கிறார் என்ற விவரத்தை யாரிடமாவது சொன்னேனா என்றால், எதிர்மனுதாரரின் தாயாரிடம் சொல்லியிருக்கிறேன். அவர் தன் மகள் அப்படிதான் இருப்பாள் என்று அனுசரித்து நடந்துக்கொள்ளும்படியும் சொன்னார். எதிர்மனுதாரரின் தாயார் சொன்னதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாம்பத்ய உறவிற்கு முயன்றபோது எதிர்மனுதாரர் என்னை உதைத்தார் என்று சம்பவம் குறித்து நான் புகார் குடுத்தேனா என்றால் எனக்கு அவமானமாக இருந்ததால் நான் முதலில் புகார் கொடுக்கவில்லை. அனைத்து மகளிர் காவல்நிலையத்தில கொடுத்த புகாரில் சொல்லியிருக்கிறேன். எதிர்மனுதாரர் என்னை எட்டி உதைத்தாக சொல்லும் சம்பவம் திருமணம் நடந்து நான்கு மாதத்தில் நடந்தது. இதுசம்பந்தமாக புகார் ஒன்றரை ஆண்டுகள் கழித்துதான் கொடுத்தேன் என்றால் சரிதான். 22/07/2020–ல் எதிர்மனுதாரர் என்னை மருத்துவமனைக்கு அழைத்தபோது நான் திருச்சியில் காண்பித்துக்கொள்ளலாம் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. நான் தனலெட்சுமி சீனிவாசன் மருத்துவமனைக்கு அழைத்துச்செல்வதாக சொன்னேன். ஆனால், எதிர்மனுதாரர் தன் தாயாருடன் போனில் தொடர்புகொண்டு பேசிவிட்டு, திருச்சியில் காண்பித்துக்கொள்வதாக சொல்லிவிட்டார். நான் 22/10/2020–ல் குமரன் லேபில் விந்தணு பரிசோதனை செய்துகொண்டேன் என்றால் சரிதான். நானும் எதிர்மனுதாரரும் மருத்துவபரிசோதனைகள் செய்துகொண்டது திருமணம் ஆனதிலிருந்து ஒன்றேகால் வருடங்கள் கழிந்தபிறகுதான். இருவரும் குழந்தை இல்லை என்பதால், நான்கு மருத்துவபரிசோதனைகள் செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. இதனால்வரை எனக்கும் எதிர்மனுதாரருக்கும் குழந்தை இல்லை என்பதால் அதை சாதகமாக பயன்படுத்தி எதிர்மனுதாரர் தாம்பத்ய உறவிற்கு மறுப்பதாக இந்த ....//

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNPB070001082021/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com



வழக்கைத் தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆன்லைனில் வியாபாரம் செய்து அதில் எனக்கு இழப்பு ஏற்பட்டதாக சொன்னால் தவறு. 66 கிராம் நகைகளை அன்னமங்கலம் கூட்டுறவு வங்கியில் 29/04/2021ல் அடமானம் வைத்தேன் என்றால், என்னுடைய இழப்புக்காக வைக்கவில்லை. எதிர்மனுதாரரின் பணத்தேவைக்காக நகைகளை அடமானம் வைத்து பணத்தை எதிர்மனுதாரரிடம் கொடுத்துவிட்டேன். எதிர்மனுதாரரின் தேவைக்காக நகைகளை அடமானம் வைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதுகுறித்து என் மனுவில் சொல்லவில்லை என்றால் சொல்லியிருக்கிறேன். நான் தனலெட்சுமி சீனிவாசன் மருத்தவக்கல்லூரியில் பேசன்ட் கோஆடினேட்டராக பணிபுரிகிறேன். எதிர்மனுதாரரின் 7 பவுன் ஆரம் எங்கள் வீட்டில் காணாமல்போனது என்றால், அது முற்றிலும் தவறானது. நான் திருமணம் ஆனது முதல் வேலை முடிந்து வீட்டிற்கே வரமாட்டேன் என்றாலும், பணி செய்யும் இடத்திலேயே தங்கிக்கொள்வேன் என்றாலும் சரியல்ல. எனக்கும் அன்னமங்கலத்தை சேர்ந்த சுமதி என்ற பெண்ணிற்கும் தொடர்பு இருப்பதாக சொன்னால் தவறு. அவர் யார் என்றே தெரியாது. இதுகுறித்து எதிர்மனுதாரர் கேட்டபோது இருவரும் இருந்து வாழுங்கள் என்று நான் சொன்னேன் என்றால் சரியல்ல. இதுசம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டபோது எதிர்மனுதாரரின் தாலியை பிடித்து இழுத்து எதிர்மனுதாரரை நான் அடித்து தள்ளிவிட்டேன் என்றால் சரியல்ல. என் தங்கை சோபனாவின் மாமனார் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றிருக்கிறார் என்றால் சரிதான். என் தங்கையின் கணவர் அவரது மாமனார் ஆகியோர் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவார்கள் என்றால் உறவினர் என்ற முறையில் வருவார்கள். அவர்கள் வந்தால் எங்கள் வீட்டில் அனைவரும் சேர்ந்து மது அருந்துவோம் என்றால் சரியல்ல. அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து தங்கியிருந்துவிட்டு எதிர்மனுதாரரை அவதூறாக பேசினார்கள் என்றால் ...//

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNPB070001082021/truecopy/order-2.pdf

சரியல்ல. எதிர்மனுதாரர் ஒரு நாள் எங்கள் வீட்டில் உறங்கிக்கொண்டிருக்கும்போது கேஸ் சிலிண்டரை துறந்துவிட்டு எதிர்மனுதாரரை கொலை செய்ய முயற்சித்தோம் என்றால் சரியல்ல. எனக்கு வாழவந்தி மற்றும் பெருவளப்பூரில் மந்திரிப்பவர்கள் என் வயிற்றில் இருந்து கருப்புநிற கட்டிகளை எடுத்துக்கொடுத்தார்கள். நான் செய்வினை மீது நம்பிக்கை வைத்துக்கொண்டு எதிர்மனுதாரரை கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு நானும் என் சகோதரியின் மாமனார் மார்ட்டின் என்பவரும் ஒரு முறை ஜாதகம் பார்த்தோம் என்றால் இல்லை. அவ்வாறு ஜாதகம் பார்த்ததாகவும் அப்போது நானும் எதிர்மனுதாரரும் சேர்ந்துவாழ்ந்தால் எங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று சொன்னதால் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழாமல் அவரை கொடுமைப்படுத்தி அனுப்பிவிட்டேன் என்றாலும் சரியல்ல. 26/01/2021-ல் அன்னமங்கலம் புனித தோமையர் ஆலயத்தில் விசாரணை நடந்தது. நான் கொடுத்த புகாரின்பேரில் விசாரணை நடந்தது. அந்த விசாரணையில் நானும் கலந்துக்கொண்டேன். அந்த விசாரணையில் நான கலந்துக்கொள்ளவில்லை என்றாலும், என் சார்பாக என் தங்கையின் மாமனார் மார்ட்டின் சுந்தராஜ் தான் கலந்துக்கொண்டார் என்றால் சரியல்ல. அந்த சர்ச்சின் பாதிரியார் தந்தை இருவரையும் சேர்ந்துவாழ சொன்னாரா என்றால் ஏன் மனுதாரரின் வாழ்க்கையை வீணடித்துவிட்டாய் என்று எதிர்மனுதாரருக்குதான் அறிவுரை சொன்னார். சர்ச்சில் எங்களை சேர்ந்து வாழ சொன்னார்கள் என்றாலும், எனக்கு சாதகமாக எதுவும் சொல்லவில்லை என்பதால் அந்த விசாரணையை அத்தோடு விட்டுவிட்டு வந்துவிட்டோம் என்றாலும் சரியல்ல. 29/01/2021-ல் சமூக நலத்துறையில் எதிர்மனுதாரர் கொடுத்த புகாரின்பேரில் விசாரித்தார்கள் என்றால், நான் முதலில் கொடுத்த புகாரின்பேரில்தான் விசாரித்தார்கள். அதன்பிறகு, எதிர்மனுதாரர் புகார் கொடுத்தார். நான் கொடுத்த புகாரை நீதிமன்றத்தில் ...//

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNPB070001082021/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com

தாக்கல் செய்திருக்கிறேன். நான் எந்த புகாரயும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்ச்சில் புகார் கொடுக்கும்போதே அனைத்து மகளிர் காவல்நிலையத்திலும் சமூக நலத்துறையிலும் நான் புகார் கொடுத்தேன். அனைத்து மகளிர் காவல்நிலைய விசாரணையில் நான் ஆஜரானேன். 13/02/2021–ல் இருவரும் சேர்ந்துவாழ அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கவுன்சிலிங் கொடுத்தார்கள் என்றால் இல்லை. சேர்ந்துவாழ கவுன்சிலிங் கொடுத்தார்கள் என்றாலும், நானும் என் தங்கயின் மாமனார் மார்ட்டின் சுந்தராஜீம் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்வதாக எழுதிக்கொடுத்துவந்துவிட்டோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் உடைமகள் மற்றும் பொருட்கள் எங்கள் வீட்டில் இருக்கிறது என்றால் சரிதான். என்னுடைய பொருட்களையும் பீரோவில் வைத்து பூட்டி சாவியை எதிர்மனுதாரர் எடுத்துச் சென்றுவிட்டார். எதிர்மனுதாரருக்கு உணவு, உடை ஆகியவைகளுக்காக நான் எதுவும் செய்யவில்லை என்பதால், எதிர்மனுதாரர் அவருடைய பெற்றோர் வீட்டில் இருக்கிறார் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டில் இருந்தபோது நல்லமுறையில் பார்த்துக்கொண்டோம். எதிர்மனுதாரரை திருமணம் செய்து சந்தோசமாக வாழ்ந்துவிட்டு தற்போது செய்வினை ஜாதகம் போன்ற நம்பிக்கை காரணமாக அவர் மீது இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போதும் எதிர்மனுதாரர் என்னோடு சேர்ந்துவாழ தயாராக இருக்கிறார் என்றால், நான் சேர்ந்துவாழ தயாராக இல்லை. அதனால், நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

A DHANASEKARAN

Judge, Family Court
Digitally signed by A DHANASEKARAN
Location: Perambalur
Date: 2022.07.08 16:27:24 +1000

நீதிபதி,
குடும்பநல நீதிமன்றம்,
பெரம்பலூர்.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNPB070001082021/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com